

தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் நாசரேத் பேரூராட்சி வியாபாரிகள் தெருவில் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டிடத்தினை திறந்து வைத்தார். மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.அ.பிரம்மசக்தி, நாசரேத் பேரூராட்சி தலைவர் திருமதி.நிர்மலா ரவி துணைத் தலைவர் அரவிந்த் சாமுவேல், ஒன்றிய செயலாளர் நவீன்குமார், மாநில வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா.ஒத்தக்கடை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் சிறப்பு முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு காப்பீட்டுக்கான அடையாள அட்டையை பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா , மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் , மாவட்ட ஊராட்சித்தலைவர் சூரியகலா கலாநிதி , கிழக்கு ஒன்றிய செயலாளர் அ. பா.ரகுபதி, வடிவேல் முருகன் யூனியன் சேர்மன் மணிமேகலை ஊராட்சி மன்ற தலைவர் முருகேஸ்வரி சரவணன் மேலூர் வருவாய் கோட்டாட்சியர் , ஆகியோர் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நமக்கெல்லாம் பொக்கிஷம்!

தி.மு.க.வின் நல்ல துடிப்பான இளந்தாரி பய புள்ள ஒன்னுத்துக்கிட்ட நான் வசமா நேத்து மாட்டிக்கிட்டேன்..!

நீங்களே சொல்லுங்கண்ணே... இது நியாயமாண்ணே...?! சென்னைல ஒரு வாரமா மழை வச்சு செய்யுது, உண்மை தான். ஆனால் பழைய மாதிரி இல்லாம, இப்ப மிகப் பெரும்பான்மையான இடங்கள்ல தண்ணி தேங்காம வடிகால் வழியா ஓடிடுது.

ஆனாலும் நம்ம சின்னவர் இருக்கார், மேயர் இருக்காங்க... சென்னைல இருக்கிற ஆற்றல் மிகு அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லாருமே களத்துல நின்னு... ஒட்டு மொத்த மாநகர நிர்வாகமும் மிகச் சிறப்பா தங்கள் பணிகளை செய்யுறாங்க...

அப்புறம் என்னா தம்பி உனக்கு பிரச்சினை..?! நீ ஏதோ ஆட்சி பற்றி குறை சொல்லப் போறியோன்னு கெதக்குன்னு ஆகிப் போச்சு...

அண்ணே குறைதான் சொல்லப் போறேன்... நம்ம ஆட்சியைப் பத்தி இல்ல... ஆனா நம்ம தலைவரைப் பற்றி...!

ஏய் என்னப்பா சொல்ற...?!

ஏண்ணே... தலைவருக்கு லைட்டா உடல் சுகமில்லை, கொஞ்ச நாள் ஓய்வு எடுக்கணும்ன்னு டாக்டர்லாம் சொல்லியிருக்காங்கன்னு அவரே சொன்னாருல்ல...?!

இப்ப சென்னைல மழை வந்தோடுன, வேட்டிய மாத்தி பேண்ட்டை மாட்டிக்கிட்டு குடைய பிடிச்சிக்கிட்டு மழைல வந்து ரோட்டுல நின்னு ஆய்வு பண்ணினா என்னண்ணே அர்த்தம்..?!

அவர் நமக்கெல்லாம் பொக்கிஷம் மாதிரி தானே..?! எல்லாமே அவர் ஆட்சில சிறப்பா நடக்கும் போது, அவரும் வந்து நின்னுதான் ஆகணுமா..?! அதான்ணே எனக்கு கோவம் கோவமா வருது..!

தம்பி நீ சொன்னதுல பாதிதான் உண்மை... அவர் நமக்கும் நம்ம இயக்கத்துக்கும் மட்டும் பொக்கிஷம் இல்லை.... மாறாக அவர் நம்ம தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பொக்கிஷம் தான்...! இன்னும் சொல்லப் போனால் வருங்காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவுக்கே அவர்தான் பொக்கிஷமாக மாறப் போகின்றார்..!

அப்பறம் என்னாண்ணே... அவர் தன்னோட உடம்ப பத்திரமா டாக்டர்கள் சொல்றத கேட்டு பாத்துக்க வேணாமா..?!

உன் ஆதங்கம் சரியானது தான் தம்பி... ஆனா அவரோட உடம்புக்கும், மனதுக்குமான மருந்தே இது தான் தம்பி. மக்களுக்கு ஒரு இடர்ப்பாடுன்னா, அங்கேதான் போய் நின்னு முதல் பணியாளரா வேலை செய்து, சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒருங்கிணைத்து, தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்தி, உத்தரவுகளை பிறப்பித்து, பத்து மடங்கு கூடுதல் வேகத்துடன் வேலையை முடுக்கி விட்டு... மக்களை எந்த இயற்கை பேரிடரும் நெருங்கிடா வண்ணம் பாதுகாத்து மக்களின் காவலனாக... குலசாமி போல நிக்குறாரே அதுதான் தம்பி அவருக்கான மருந்து..!

நீ கவலையே பட வேண்டாம் தம்பி. இந்த மழையால் மக்கள் எவரும் பாதிப்படையவில்லை என்ற நிலை உருவானாலே அவர் உற்சாகமாகி விடுவார்... இன்னும் கூடுதலாக உழைக்க ஆரம்பித்துவிடுவார். அவர் உடல் சுகவினங்கள் எல்லாம் பஞ்சாய் பறந்து விடும்..!

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சென்னையில் தொடர்ந்து வசிப்பவர்களாக இருந்தால்.... அவர்கள் அனைவருக்கும் ஒரு விஷயம் நன்றாகத் தெரிந்திருக்கும்..!

தலைவர் தளபதியார் அவர்கள், சென்னையில் இது மாதிரியான இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் நேரங்களில் எல்லாம்...

ஒரு இளைஞரணி தலைவனாகவோ... ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ... ஒரு மேயராகவோ... ஒரு உள்ளாட்சித் துறை அமைச்சராகவோ... ஒரு துணை முதல்வராகவோ... ஒரு எதிர்க்கட்சி தலைவராகவோ....



அவரது களப்பணிகள் மிகச் சிறப்பானதாக இருக்கும்..! எங்கே அதிக பிரச்சினை வருகின்றதோ, முதல் நபராக அவர்தான் போய் அங்கே நிற்பார்..! அவர் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தந்த பகுதி மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் அங்கே வந்து பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் அமைந்தே தீரும்..!

ஆனால் இப்பொழுதோ... தன் கரங்களில் அனைத்து அதிகாரங்களும் இருக்கக் கூடிய தமிழ்நாடு முதலமைச்சராகவே அவர் இருக்கின்றார். அதனால் தான்...

பழைய சென்னை போல் இல்லாமல்... கடந்த இரண்டு ஆண்டுகளில் வடிகால்களை மிகப் பெரிய அளவில்... உலகத் தரத்தில் கட்டமைத்து வருகின்றார். தனது இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் 8 மாதங்கள் கொரானாவோடு போராடியே கழிந்து விட்ட நிலையில்...



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

மீதமிருந்த காலகட்டத்தில்... சென்னையின் வடிகால் வசதிகளை 70 சதவிகிதத்திற்கும் அதிகமாக முடித்து விட்டிருக்கின்றார். அடுத்த மழைக் காலத்திற்குள் கிட்டத்தட்ட அந்த பணிகள் முழுமையாகவே முடிந்து விட்டிருக்கும்.

ஆகவே தான் இப்பொழுது கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில் இருந்தது போல...

சென்னையில் உள்ள எந்தச் சுரங்கப்பாதையிலும் பெரு மழை நேரத்திலும் நீர் தேங்கவில்லை. சென்னையின் இருதயமாக திகழக் கூடிய தியாகராய நகர் உள்ளிட்ட அதனைச் சுற்றியுள்ள எந்த பகுதியும் மழை நீரில் மிதக்கவில்லை..!

வடசென்னை புளியந்தோப்பு பகுதிகளில் கூட இந்தாண்டு மழைநீர் தேங்கவில்லை. எல்லா இடத்திலும் தண்ணீர் புகுந்து, லட்சக் கணக்கான மக்கள் பல நாட்கள் முகாம்களில் தங்க வைக்கப்படவில்லை.

எந்த சமூக இயக்கங்களுக்கோ, எதிர்க் கட்சிகளுக்கோ... மக்களுக்குப் போட் சேவையும், உணவு தான சேவையும் செய்யும் அவசியம் ஏற்படவில்லை.

முன்பெல்லாம் ஊடகங்களில் சென்னையின் மழைக்காலம் என்றாலே, தங்கள் அலுவலக ஜன்னலை திறந்து சுற்றியுள்ள பகுதிகளை வீடியோ எடுத்து, சென்னையின் நிலவரத்தை உலகிற்குக் காட்டி வந்த நிலை மாறி...

இப்பொழுது மழை நேரத்தில் சென்னையில் மழை நீர் தேங்கியிருக்கும் காட்சியை காட்டுவதற்காக மெரினா கடற்கரைக்குச் சென்று கிழக்குப் பக்கமாக கேமராவை திருப்பிக்காட்ட வேண்டிய நிலையை நம் தலைவர் உருவாக்கியிருக்கின்றார்..!

இன்னும் கூட அவரது கனவு நிறைவேறி விட்டதாக அவர் நினைக்கவில்லை. சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள், சாலைகள் அகலப்படுத்தும் பணிகள், பறக்கும் சாலைகள் திட்டங்கள் அனைத்தையும் இந்த வடிகால் திட்டத்தோடு இன்னும் ஒன்னரை ஆண்டுகளில் முடிக்க வேண்டும் என்ற கனவுதான் அது.

தலைவர் தளபதியார் அவர்கள், ஒரு நிர்வாகியாக தனக்குத் தானே இரண்டு இலக்குகளை நிர்ணயம் செய்து கொள்வார். ஒன்று... ஒரு திட்டத்திற்கான செலவை, திட்ட மதிப்பீட்டினை விட குறைவான செலவிலேயே செய்து முடிப்பது. இரண்டாவது... திட்டத்திற்கான கால மதிப்பீட்டிற்கு முன்னதாகவே அதை முடித்துக் கொடுப்பது..!

காலத்தை முன்னதாகவே முடித்து விட்டால் அதன் செலவையும் கட்டுப்படுத்தி விடலாம். அதற்கு அவர் தேர்ந்தெடுத்த முறை தான்... தான் செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை, நேரம் காலம் பார்க்காமல், தானே நேரில் சென்று அடிக்கடி ஆய்வு செய்வது என்பதாகும்.

அப்படி ஆய்வுகளுக்குச் செல்வதால், எந்தத் திட்டப்பணியும் எந்தக் காரணத்திற்காகவும் ஒரு நாள் கூட தடையின்றி வேகமாக முடிக்கப்பட்டுவிடும். உத்தரவுகள், கிளியரன்ஸ் போன்றவை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு... வேகமாகப் பணிகளை முன்னெடுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு அனைவர் மத்தியிலும் தங்க சங்கிலிகள் அணிவித்து அவர் உற்சாகப்படுத்திய சம்பவங்கள் ஏராளமாக உண்டு..!

அதன் காரணமாகவே சென்னையில் கட்டப்பட்ட மேம்பாலங்கள் ஆகட்டும், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மிக நீளமான பாலங்கள் ஆகட்டும்... அவற்றிலெல்லாம் அவரது அடையாளங்களை எவராலும் அழிக்க முடியாது..!

அதே போன்று தான், இன்னும் ஒன்னரை அல்லது இரண்டு ஆண்டுகளில் சென்னையை அவர் நவீனமயப்படுத்தியே தீருவார். இந்திய ஒன்றியத்தின் மற்ற மாநிலங்களின் தேர்தல் காலத்தில்... கட்சிகள் அனைத்தும் சென்னை மாநகர தரத்திற்கு இணையாக தங்கள் மாநில தலைநகரை உயர்த்துவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளிக்கும் நிலையை உருவாக்கியே தீருவார்..!

அவருக்குத் தேவை எல்லாம் பெரும் பணமோ... புகழோ கூட இல்லை..! சிங்கப்பூரின் சிற்பி லீகுவான்யூ போல... தன் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டை உலக நாடுகளுக்கு இணையாக... உட்கட்டமைப்பு, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் இப்படி அனைத்திலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே..!

ஆகவே சென்னையர்களே... வாருங்கள் நம்ம தலைவர் ஸ்டாலினோடு கைகோர்த்த படியே பயணிப்போம்...!

## ரூ. 305 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

# சிவகங்கையில் - தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சிவகங்கை, டிச. 3 -*

சிவகங்கை மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் சிவகங்கை தனியார் திருமண மண்டபத்தில் உலக முதலீட்டாளர்கள் தொழில் மாநாடு மாவட்ட ஆட்சியர் ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியின் போது 505 வாக்குறுதிகளை அறிவித்தார். அதில் 85% சதவிகித வாக்குறுதிகளை இரண்டரை ஆண்டுகளில் நிறைவேற்றி உள்ளார்.

இது தவிர அறிவிக்காத புதிதாக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார். கல்வி, விவசாயம், தொழில் ,ஆகிய மூன்று துறைகளுக்கு தனி கவனம் செலுத்தி வருகிறார். இத்துறைகள் வளர்ச்சி அடைய அதற்கான நிதியினை ஒதுக்கி வருகிறார். பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக தமிழகம் விளங்கி வரும் வகையில் முதல்வர் தலைமையில் தமிழகம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக படித்து விட்டு வேலை வாய்ப்பின்றி உள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பினை வழங்கிடவும் அவர்களை சுய தொழில் துவங்கிட ஊக்கப்படுத்தும் வகையிலும் பல்வேறு திட்டங்களை தீட்டி அதனை செயல்படுத்தி வருகிறார். முதல்வரின் லட்சியமாக 2030 ஆம் ஆண்டில் தமிழகம் நம்பர் ஒன் ட்ரில்லியன் அமெரிக்கா டாலர் மதிப்பிலான பொருளாதார ரீதியில் உயர்த்திடும் வகையில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி 7,8 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது .இதன் தொடர்பாக மாவட்டந்தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ் நாடு திகழ்ந்து வருகிறது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சி களை முதல்வர் வழிகாட்டுதலின் படி சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில்களின் முக்கிய நகரமாக திகழ வேண்டும் என்று முதல்வர் விருப்பத்தின் பேரில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. சென்னையில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள்மாநாடு குறித்து ஒவ்வொறு மாவட்டத்திலும் இத்தகைய மாநாடுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்திற்கு ரூ. 300 கோடியில் புரிந்துனர்வு ஒப்பந்தம் நிர்ணயிக்கப்பட்டது. தற்பொழுது ரூபாய் 305 கோடியில் புரிந்துனர்வு ஒப்பந்ததங்கள் பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் 3162 புதிய வேலைவாய்ப்புகள் மாவட்டத்தில் உருவாகும். இத்தகைய தொழில் முதலீட்டாளர் மாநாட்டினை இளைஞர்கள் சுயதொழில் நடத்த விரும்புகிறவர்கள் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. வாழ்த்திப் பேசினார். மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் கணேசன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணி முத்து, சிவகங்கை ஒன்றிய குழுதலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், நகர்மன்ற துணைத்தலை வர் எம்.கார் கண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் ஏடி.என் ரவி, சாந்தா சகாயராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் மாவட்ட அளவிலான சிறு, குறு, தொழில் நடத்தும் தொழிலதிபர்கள், பயனாளிகள் கலந்து கொண்டார்கள்.

## அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகள்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

*சென்னை, டிச. 3-*

அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு.

இந்திய திருநாட்டிலேயே முதன்முறையாக முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் ஊனம் என்ற சொல்லை நீக்கியும், அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் என பெயர் வைத்து மகுடம் சூட்டினார். மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துறை கண்டு தனி நலவாரியம் அமைத்து தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்வு சிறக்க வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வந்தார் என்பதை இன்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறோம்.

இந்நிலையில் தலைவர் தளபதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதுடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துகொண்டும், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்கினார்.

நலவாரியம் மூலம் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித்தொகை, விபத்து நிவாரணத்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நலவாரியம் சார்பாக வழங்கப்படும் அனைத்து உதவித்தொகைகளும் இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கிட அரசாணை பிறப்பித்தார்.

இரண்டுகால் பாதிப்பு ஏற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இணைப்பு சக்கர ஸ்கூட்டியை, ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தி வழங்கிட ஆணை பிறப்பித்தார்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் சிறப்பு தேர்வு, வீடு இல்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு, இலவச பட்டா, கல்வி உதவித்தொகை இருமடங்கு, நகராட்சி நிர்வாகத்துறை மூலம் பெருநகரம் மாநகராட்சி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள், உள்ளாட்சிகள் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் இட ஒதுக்கீடு செய்தல், மற்றும் சாலை ஓரங்களில் (பிளாட்பாரங்களில்) கடை வைத்திட சிறப்பு அனுமதி வழங்குதல், இந்து அறநிலையத்திற்குட்பட்ட திருக்கோவில்களில் இலவச திருமணங்கள், சீர்வரிசைகள் வழங்குதல், கூட்டுறவுத் துறையின் செயல்படும் வங்கிகளில் சுயதொழில் செய்திட வங்கிகடன், பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோர், வாய்பேசமுடியாதோர் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன கைபேசி, நவீன ஒளிரும் மடக்கு குச்சி, நவீன செயற்கை கால், பள்ளி, கல்லூரிகளில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை பராமரிக்கும் அவரது தாய், தந்தையரின் வருமானத்தை ஈட்டுவதற்கு பெற்றோர்களுக்கு நவீன தையல் இயந்திரம், தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் சிறப்பு, பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு மடங்கு ஊதியம் வழங்குதல் போன்றவற்றை வரலாற்று திட்டங்களை வழங்கி மாற்றுத்திறனாளிகளின் சிரிப்பில் முத்தமிழறிஞர் கலைஞரை கண்ட முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கு அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், அரசு துறைகளில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டி.என்.பி.எஸ்.சி மூலம் நடத்திடும் துறைத் தேர்வுகளில் (Department Exam) மாற்றுத்திறனாளிகள் பங்கேற்று தேர்ச்சி பெற முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். இதனால், அரசு பணிகளில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக முதலமைச்ச ருக்கு நன்றியினையும், மாற்றுத்திறனாளிகள் சமூகத்திற்கு வாழ்த்துகளையும் தெரிவித்து அதன் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

## செஞ்சியில் அ.தி.மு.க., பா.ம.க. கட்சியினர்

# அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!

*செஞ்சி, டிச. 3 -*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 16வது வார்டு பீரங்கி மேடுபகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. - பா.ம.க. நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 16வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் புவனேஸ்வரி அண்ணாதுரை, நிர்வாகிகள் அறிவழகன், சுரேஷ், ஏற்பாட்டில் பீரங்கி மேடுபகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகி பிரசாந்த் தலைமையில் அ.தி.மு.க. பா.ம.க. நிர்வாகிகள் தேவராஜ், ஜனா, முல்லை வேந்தன், சேகர், கோபி, தனுஷ்,மணி, கோபி, மணி பாரதி, சந்தோஷ், சுப்பிரமணி, சுதன், சக்திவேல், ஏழுமலை, வெங்கடேஷ், அன்பரசன் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து உறுப்பினர் படிவத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர செயலாளர் கார்திக், என் ஆர் பேட்டை ஊராட்சி செயலாளர் சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்களாக அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் தாயார் ருக்மணி பழனிவேல்ராஜன், ஒப்பந்தக்காரர் செல்லையா, வழக்கறிஞர் அன்புநிதி மனைவி மீனா, டாக்டர் சீனிவாசன், சுப்புலட்சுமி ஆகியோர் பதவியேற்றனர்.